முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1089

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.09.2022, வியாழக்கிழமை

1. தர்மபலம் கொண்ட அரங்கனே
தரணிகாக்க வந்த தேசிகனே
பெருமைமிக்க தொண்டர் படைகளை
பேருலகம் எங்கும் நிறுவி
2. நிறுவியே உலகமாற்றம் செய்ய
நிலமதனில் என் சக்தியாக வந்த அரங்கனே
வருமுலகில் அரங்கனுக்கு இன்னும் சக்திகூட
வல்லமைபட ஆறுமுகப்பெருமான் யானும்
3. யானுமே ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சுபகிருது நங்கை திங்கள்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 05 நாள், 22.09.2022 வியாழக்கிழமை)
ஞானதேசிகன் தர்மம் உலகமெங்கும்
நம்பிக்கை தரும்படி விரைந்து வளர்ந்து வருகவருக
4. வருகவே வையகத்தில் உலகோரெல்லாம்
வல்லமைபட தர்மவான்களாக சிறந்து
ஐயன் எந்தன் அருள்ஞானபலத்தோடு
அரங்கன் தேடலில் சிலகோடி ஞானியர்கள்
5. ஞானியர்கள் ஞானயுகமாற்றம் செய்ய
ஞானபலத்தோடு உருவாக்கப்பட நேரும்
நேர்மைகொண்டு அரங்கன் தொண்டில்
நிதானம் பட நீதிகுறையா செய்யும் மக்களெல்லாம்
6. வறுமை துன்பத்திலும் அரங்கன் தர்மத்தைவல்லமைபட காக்கும் தொண்டர்களெல்லாம்
வையகத்தில் உடனே தேர்வு செய்யப்பட்டு
உண்மை மாந்தர்கட்கு ஞானியாகும் வாய்ப்பும்
உயர்வாக அரங்கனால் உருவாக்கப்படும்
7. ஆகவே தர்மத்தை விட்டகலா அரங்கன் சன்மார்க்கத்தை ஏற்று
நீதிநெறிபட வாழுகின்ற மக்கள் படையே அரங்கன் படையாகும்
அரங்கன் படைகள் வழி அனைவருக்கும் ஞானியாகும் வாய்ப்புத் தந்து
ஆறுமுகன் யான் அற்புதத்தை நிகழ்த்துவேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–